# 18UECE2 - Labour Economics
# உழைப்பு பொருளியல்


## Dr. B.BALAMURUGAN

**Asst.Professor, Research Dept. of Economics**
**The HH Rajah's Govt. College (A) - Pudukkottai**


LIVE ONLINE CLASSES

## III BA (2020-21) Unit-1



# உழைப்பு பொருளியல்

- உழைப்பு - பொருட்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மனித முயற்சி உழைப்பு ஆகும்.
- இது தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் திறமைகளையும் உள்ளடக்குகிறது. உழைப்புக்கான கொடுப்பனவு கூலி எனப்படுகின்றது.

# உழைப்பிற்கான ஈடும், அளவீடும்

- உழைப்பிற்கான அடிப்படையான ஈடு கூலியாகும். ஒரு குறிப்பிட்ட காலத்துக்கான ஈடு, கூலி வீதம் எனப்படும். இவ்விரு சொற்களும் சில சமயம் ஒரே பொருளிலும் பயன்படுத்தப்படுவதுண்டு. இது தொடர்பான கருத்துருக்களாவன:
- **கூலி** - ஒரு கால அலகுக்கான கொடுப்பனவு (பெரும்பாலும் ஒரு மணிநேரத்துக்கு)
- **சம்பாத்தியம்** (earnings) - குறிப்பிட்ட காலப்பகுதியில் பெறப்பட்ட கொடுப்பனவு. (ஒரு வாரம், மாதம் அல்லது ஆண்டு)



- **மொத்த ஈட்டுத்தொகை** - சம்பாத்தியம் + உழைப்புக்கான பிற நலக் கொடுப்பனவுகள் (benefits).
- **வருமானம்** - மொத்த ஈட்டுத்தொகை + உழைப்புசாரா வருமானம் (Unearned income)
- பொருளியலாளர்கள், உழைப்பை, உழைப்பின் நேரம், மொத்தக் கூலி, அல்லது செயற்திறன் (efficiency) என்பவற்றின் மூலம் அளவிடுகிறார்கள்.

## உழைப்பு பொருளியல்

- **கூலிச் சம்பளம்** என்பது 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில், தென்னிந்தியாவில் இருந்து மலாயாவுக்கு வேலைகள் செய்ய கொண்டு வரப்பட்ட தென்னிந்தியர்களுக்கும்;
- இலங்கையின் மலைத் தோட்டங்களில் வேலைகள் செய்ய கொண்டு வரப்பட்ட தமிழர்களுக்கும் வழங்கப்பட்ட ஊதியத்தைக் குறிக்கும் சொல் ஆகும்.



# Nature / Scope of Labour Economics

# உழைப்பின் பொருளியல் வாய்ப்பு/ நோக்கம்

## உழைப்பின் மதிப்பு

1. ஒரு பண்டத்தில் அடங்கியிருக்கும் அவசியமான உழைப்பின் அளவின் மூலமாக மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது (இது தான் முதலாவது கருத்து, முக்கியமானதும் கூட).

2. இதனோடு அந்தக் குறிப்பிட்ட பண்டத்துக்கு வாங்கக் கூடிய உழைப்பின் அளவினால் மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

3. சாதாரணமான பண்டப் பொருளாதாரத்தில், கூலி உழைப்பு என்பது இல்லாமலும் பண்ட உற்பத்தியாளர்கள் தங்களுக்குச் சொந்தமான உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு பாடுபடுகின்ற பொருளாதாரத்தில் இது அளவைப் பொறுத்த வரையிலும் ஒரே மாதிரியாக இருக்கிறது.



## உழைப்பின் மதிப்பு..

4. உதாரணமாக, ஒரு நெசவாளி துணியைக் கொடுத்து ஒரு ஜோடி காலணிகளை வாங்குகிறார்.

5 அந்தத் துணி ஒரு ஜோடி காலணிகளின் மதிப்புக்குச் சமம் என்று சொல்லலாம். அல்லது காலணிகள் தயாரிப்பாளர் ஒரு ஜோடி காலணிகளைத் தயாரிப்பதற்கு எடுத்துக் கொண்ட நேரத்திலுள்ள உழைப்பின் மதிப்பைக் கொண்டிருக்கிறதென்று சொல்லலாம்.

6 ஆனால் அளவு ரீதியான பொருத்தம் அதன் முற்றொருமைக்கு நிரூபணம் அல்ல; ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் மதிப்பை அளவு ரீதியாக ஒரே ஒரு வழியைக் கொண்டு அடுத்த பண்டத்தின் தெரிந்த அளவைக் கொண்டு– மட்டுமே நிர்ணயிக்கலாம்.

## உழைப்பு சக்தியின் சிறப்புத் தன்மை - A

கூலி எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது.

- ஒரு சரக்கின் விலை நிர்ணயிப்பதில் மூன்று முக்கிய அம்சங்கள் முன் வருகின்றன.
- ஒன்று, விற்பனையாளர்களுக்கிடையேயான போட்டி.
- இரண்டு, வாங்குபவர்களுக்கிடையேயான போட்டி,
- மூன்றாவது, இவ்விரு அணிகளுக்குமிடையேயான போட்டி.



## உழைப்பு சக்தியின் சிறப்புத் தன்மை - B

- சந்தையில் ஒரு சரக்கின் விலை என்பது இம்மூன்று வகைப் போட்டியின் முடிவாக நிர்ணயமாகிறது.
- ஒரு சமயம் சரக்கின் வரவு அதற்கான கிராக்கியை விடக் கூட இருந்தால் விலை சரியும். மாறாக இருந்தால் கூடும்.
- வரவுக்கும் கிராக்கிக்கும் உள்ள இடைவெளி ஒரு சரக்கின் விலை உயருமா அல்லது சரியுமா என்பதை நமக்குத் தெரிவிக்கிறது.

## உழைப்பு சக்தியின் சிறப்புத் தன்மை – C to start

- சராசரியாக சந்தைவிலை என்பது ஒரு சரக்கின் உற்பத்திச் செலவை சந்திக்கும் வகையில் இருக்க வேண்டும் என்பது தான்.
- தொடர்ந்து உற்பத்திச் செலவுக்கு குறைந்து விலை இருந்தால், முதலாளி ஆலையை மூடிவிடுவார். கிடைத்த விலைக்கு விற்றுவிட்டு வேறு துறையில் முதலீடு செய்யச் சென்று விடுவார்.
- தொடர்ந்து ஒரு சரக்கிற்கு உற்பத்திச் செலவைவிட அதிகமாக விலை இருந்தால், வேறு துறைகளில் முதல் போட்டவர்கள் இந்த சரக்கை உற்பத்தி செய்ய வந்துவிடுவார்கள்.
- ஒரு சரக்கின் விலை என்பது (சராசரியாக) அதன் உற்பத்திச் செலவை (இது சராசரி லாபத்தை உள்ளடக்கியது) யொட்டியே நிர்ணயமாகும்



## உழைப்பு சக்தியின் சிறப்புத் தன்மை - D

- உழைப்புச்சக்தியின் உற்பத்திச் செலவு என்பது தொழிலாளியின் உற்பத்தி மற்றும் மறு உற்பத்திக்கான செலவு என்று கொள்ளலாம்.
- இது ஒட்டுமொத்தமாக தொழிலாளி வர்க்கத்திற்குப் பொருந்தும்.
- இதன் அடிப்படையில் நிர்ணயமாகும் கூலியைவிட ஒரு தனிப்பட்ட தொழிலாளியின் கூலி பல நேரங்களில் குறைவாக இருக்கலாம்

## உழைப்பு சக்தியின் சிறப்புத் தன்மை - E

- ஒரு நாட்டில் தொழிலாளர்களின் ஆற்றல் உரிய முறையில் பயன்படுத்தப்படுவது அதன் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமாகும்.
- அதே நேரத்தில் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படும் பொருள் அல்ல, அவர்கள் மனிதர்கள் என்பதால் உற்பத்தியில் தனித்தன்மையான அம்சமாக உள்ளனர்.
- எனவே தொழிலாளர் கொள்கைகளில் அவர்கள் பற்றிய சமூக அல்லது நல்வாழ்வு அளவீடுகள் இருக்க வேண்டும்.



Dr.Balamurugan HHRC Pudukkottai

## Importance of Labour Economics

# உழைப்பு பொருளியல் முக்கியத்துவம்

## உழைப்பு எப்படி இருக்க வேண்டும்

1 செய்யும் செயல் நமது அறிவுக்கும் திறமைக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும்.

2.என்ன செய்கிறோம், ஏன் செய்கிறோம், கிடைக்கக்கூடிய பலன் என்ன, அது உழைப்பிற்குப் போதுமானது தானா என்பதை அறிந்திருங்கள்.

3 நாம் செயல்புரிகிற விதம் கச்சிதமானது தானா, மற்றவர்கள் எப்படிச் செய்கிறார்கள், நம்மை விட அவர்கள் செயல்புரிகிற விதம், சிறந்ததாக, உள்ளதா, என்பதை விருப்பு வெறுப்பில்லாமல் பார்க்க வேண்டும்



## Contd..

4 செய்யும் செயலில் ஈடுபாடும், முழுக் கவனமும் இருக்க வேண்டும்.

5 நம் தொழில் சம்பந்தமாக புதிது புதிதாக வரும் மாற்றங்களை கண்டிப்பாக கவனித்து வர வேண்டும்.



This study material is prepared for III year BA Economics, HHRC, Pudukkottai by Dr. B.Balamurugan

# தொழிலாளர்களின் பிரச்சினைகள்

- பணிபுரியும் சூழ்நிலை,
- வேலை நேரம்,
- விடுமுறை நாட்கள்,
- மிகைநேரப்பணி,
- குழந்தைகளை பணிக்கு அமர்த்துதல்,
- பெண்கள் மற்றும் இளையோர், பாதுகாப்பு,
- ஆரோக்கியம் மற்றும் தொழிலாளர்களின் நலன்



# பெண் தொழிலாளர்களின் பிரச்சினைகள்

1. பெண்களின் வேலை முறையில் சில பிரச்சனைகள் மற்றும் சிரமங்கள் உள்ளன.

2. போதிய வேலைவாய்ப்புகள் பெண்களுக்கு கிடைப்பதில்லை.

3. பெண்கள் வீட்டு வேலைகளை செய்வதற்கே சமூகம் விரும்புகிறது என்பதாலும் பெணகள் முழு நேரப் பணிகளில் அதிக ஈடுபட முடியவில்லை.

4. பெண் பணியாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் இருப்பதும் ஒரு பிரச்சனையாகும்.

- 5.மதுவின் கொடுமையால், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்து வருகிறது.

- 6.சீரும், சிறப்போடும் நடத்தப்பட வேண்டிய பெண்கள் பல்வேறு வகையான வன்முறைகளுக்கு இலக்காவது கொடுமையானது.

- 7.பல்வேறு துறைகளில் உள்ள பெண்கள் பாதுகாப்போடு பணி செய்ய முடிகிறதா என்றால்..., கேள்விக்குறிதான்



- 8.நகர்புறங்களில் பல கம்பெனிகளிலும், தொழிற்சாலைகளிலும், தொலைக்காட்சி நிறுவனங்களிலும், ஊடகங்களிலும் பணி புரியும் பெண்கள் பாதுகாப்பற்ற சூழலில் பல வகையான பணிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர்.

- 9.இன்னும் கிராமப் புறங்களில் வாழும் பெண்கள் பாதுகாப்பின்றி அதிகளவில் வாழ்க்கையை தொடருகின்றனர்.

- 10.நாட்டின் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமெனில் வேலை செய்யும் இடங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.

# இந்தியாவில் தொழிலாளர்களின் நிலைமை

- இந்திய தொழில் சந்தையில் இருவகையான நிலைமைகள் உள்ளன – 92 சதவிகித வேலையாட்கள் முறைப்படுத்தப்படாத துறைகளிலும் பத்த சதவிகிதத்தினர் முறைப்படுத்தப்பட்ட துறைகளிலும் உள்ளனர்.
- இப்படி பெருகிவரும் முறைப்படுத்தப்படாத தொழில்துறையை எதிர்கொள்ள பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன.
- திறன்மிகு இந்தியா திட்டம் மூலம் பிரதம மந்திரி திறன் வளர்ப்புத் திட்டங்கள் மூலம் 20க்கும் மேற்பட்ட மத்திய அமைச்சகங்கள் புதிதாக வேலைக்கு சேருபவர்களின் திறன்களை வளர்த்து நல்ல பணியில் அமர்த்த திறன் வளர்ப்பு திட்டங்களை செயலாற்றி வருகிறது.



Dr.Balamurugan HHRC Pudukkottai

## Contd..

- இந்தியாவின் மொத்த ஜனத்தொகை 1.3 பில்லியன் (உலகமக்கட் தொகையில் கிட்டத்தட்ட 6ல் ஒரு பங்கு).
- 70 சதவிகிதத்தினர் கிராமப்புறங்களில் வசிக்கிறார்கள்.
- மொத்த ஜனத்தொகையில் 40/45 சதவிகிதத்தினரை பணியாளர்கள் / தொழிலாளர்கள் என்று கருதலாம்.
- இந்திய மக்கட்தொகையில் ஆண்களைவிட பெண்களின் வேலைவாய்ப்பு எண்ணிக்கை தொடர்ந்து 20 சதவிகிதம் குறைவாகவே உள்ளது.

## Contd.,

- உலகத்திலேயே இந்தியாவில் தான் ஆண் பெண்களுக்கிடையே ஊதியம் 26 % வரை மிகவும் வேறுபட்டுள்ளது.
- கிராமப்புற, நகர்ப்புறங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் மிகுந்து காணப்படுகின்றன.
- பொருளாதார சீர்திருத்தற்கு பின் வளர்ச்சி விகிதம் உயர்ந்து கொண்டே போனாலும் முறைப்படுத்தும் தன்மையும் பணியாளர்களுக்கு பாதிப்பான நிலைமையும் உயர்ந்து கொண்டேபோகிறது.



## Contd.,

- சமீபகாலங்களில் தோற்றுவிக்கப்பட்ட புதிய வேலைவாய்ப்புகளில் 80 சதவிகித்த்திற்குப் மேல் தற்காலிகப் பணிகளாகவே உள்ளன.
- பெரும்பான்மையான பணிகள் கட்டுமானத்துறையில் உள்ளன.
- பணியாளர்களுக்கு சமுக பாதுகாப்பு வழங்க பல சட்டங்களும் திட்டங்களும் இருந்த போதும்புதிதாக உருவாக்கப்படும் வேலைகள் தரமாக உள்ளதா என்பதையும் உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

End of Unit-1

This study material is prepared by Dr.B.Balamurugan HHRC, Pudukkottai

10/31/2020 Dr.Balamurugan 9443174749 34

Dr.Balamurugan HHRC Pudukkottai